Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 95/2022 |
| Police station | : | RPF-Cuddalore |
| Deposition of witness for Prosecution | : | LW 1 / PW1 |
| Name | : | ஆல்பட்தினகரன் ஆய்வாளர் |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 04.06.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(2 முதல் 6 எதிரிகள் ஆஜர். 1 வது எதிரி இறந்துவிட்டார்).

(சாட்சி ஏற்கனவே 20.11.2025 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு மீண்டும் வரவழைத்து முதல் விசாரணை செய்யப்படுகிறது).

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

மேலும் இந்த வழக்கில் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டது. 24.12.2020 அன்று சாட்சி பார்த்தசாரதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி சாட்சி பார்த்தசாரதியின் வாக்குமூலம் அ.சா-ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் 28.12.2020 அன்று சாட்சிகள் சக்திவேல், கோபால், சௌந்தரராஜன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி சாட்சிகளின் வாக்குமூலம் அ.சா.ஆ.15 மற்றும் அ.சா.ஆ.17 வரை குறியீடு செய்யப்படுகிறது**.

09.01.2021 ம் தேதி RPF தலைமை காவலர்கள் கணேசன் மற்றும் பிரபு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி சாட்சிகள் கணேசன் மற்றும் பிரபு ஆகியோர்களின் வாக்குமூலங்கள் அ.சா–ஆ.18 மற்றும் அ.சா–ஆ.19 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** 15.01.2021 ம் தேதி இரயில்வே அதிகாரி திரு. கஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி திரு. கஜேந்திரன் வாக்குமூலம் அ.சா–ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 20.01.2021 அன்று பிரசாந்த் த/பெ. தனஞ்செயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி தனஞ்செயன் என்பவரின் வாக்குமூலம் **அ.சா–ஆ.21ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 06.02.2021 ம் தேதி முருகேசன் த/பெ. ராஜேந்திரன் என்பவரை விசரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி முருகேசன் என்பவரின் வாக்குமூலம் அ.சா–ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் 17.02.2021 இரயில்வே ஊழியர் ரமேஷ் மற்றும் 19.02.2021 இரயில்வே ஊழியர் பிந்து என்பவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். **மேற்படி ரமேஷ் மற்றும் பிந்து இருவரின் வாக்குமூலம் முறையே அ.சா–ஆ.23 மற்றும் அ.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இந்த வழக்கில் 29.02.2021 காவலர் அமித்கான் மற்றும் 26.03.2021 ஆறுமுகம் த/பெ. காசி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி அமித்கான் மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் வாக்குமூலம் முறையே அ.சா–ஆ. 25 மற்றும் அ.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் இந்த வழக்கில் 03.05.2021ம் தேதி RPF உதவி ஆய்வாளர் ராஜா மற்றும் 05.05.2021 ம் தேதி தலைமை காவலர் ஆறுமுகம் மற்றும் 10.05.2021 ம் தேதி உதவி ஆய்வாளர் பிலோமின்ராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி உதவி ஆய்வாளர் ராஜா, காவலர் ஆறுமுகம், உதவி ஆய்வாளர் பிலோமின்ராஜ் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் முறையே அ.சா–ஆ. 27, அ.சா–ஆ.28 மற்றும் அ.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 25.05.2021 ம் தேதி இரயில்வே

ஊழியர் பல்பீர்சிங் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். **மேற்படி பல்பீர்சிங்கின் வாக்குமூலம் அ.சா.ஆ.30 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 06.06.2021 ம் தேதி இரயில்வே ஊழியர் கீமேன் பாஸ்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி பாஸ்கரன் என்பவரின் வாக்குமூலம் அ.சா–ஆ.31 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 26.06.2021 ம் தேதி கலியமூர்த்தி த/பெ. தங்கவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி கலியமூர்த்தி என்பவரின் வாக்குமூலம் அ.சா–ஆ.32 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 09.07.2021ம் தேதி அருணாச்சலம் த/பெ. கோதண்டம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி கோதண்டம் என்பவரின் வாக்குமூலம் அ.சா–ஆ.33 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 04.10.2021 ம் தேதி கிராம நிர்வாக அதிகாரி தொண்டமாந்ததம் ஓம்சத்தியரீஹா என்பவர் நிலச்சான்றிதழ் வழங்கினார். **மேற்படி நிலச்சான்றிதழ் அ.சா–ஆ. 34 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் 02.12.2021ம் தேதி குணசேகரன் பாரஸ்டர் கடலூர் அவர்கள் கைப்பற்றப்பட்ட இரயில்வே மரங்களை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கினார். **மேற்படி ஆய்வு அறிக்கை அ.சா–ஆ.35 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் இந்த வழக்கில் அனைத்து ஆவணங்களையும் விசாரணை செய்து எதிரிகள் தில்லைகோவிந்தன், சிவபாலன், ஜெயக்குமார், அர்ஜீனன், சரவணன் வசந்தகுமார் ஆகியோர்களுக்கு எதிராக சட்டப் பிரிவு 3(a) RPUP Act ன் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>